# வெற்றிட அறிவித்தல்

# மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

**மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின்**
**மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்**

மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தில் எதிர்காலத்தில் வெற்றிடம் நிலவ உள்ள மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையிலுள்ள இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிருவாக தரம் I இலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்**

I. இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிருவாக தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தராக இருத்தல்.

II. தற்போது அரச சேவையில்/ மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுவதால் வயது எல்லை ஏற்புடையதன்று.

III. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 05 வருடகாலப்பகுதியில் எவ்வித ஒழுக்காற்று செயற்பாடுகளுக்கு அல்லது தண்டணைகளுக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.

02. **ஆட்சேர்ப்புமுறை**

மத்திய மாகாண கௌரவ. ஆளுநரின் அனுமதியின் கீழ், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள், கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் சேவை முதுநிலை மற்றும் திறமை அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவர். (குறிப்பிடப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு சுதேச வைத்திய விடயப் பொறுப்பான ரேகை அமைச்சினைப் பிரதிநிதிப்படுத்தும் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்)

(அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் திட்டம் www.psc.cp.gov,lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

குறிப்பு: - தகைமைகளை உறுதிப்படுத்தும் அனைத்து சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

03. **விண்ணப்பிக்கும் முறை**

முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2022.12.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடிய வகையில் திணைக்களத் தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரினூடாக (மாகாண சபையிற்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தராயின் தனது விண்ணப்பத்தை மாகாண அமைச்சுச் செயலாளர் மற்றும் பிரதான செயலாளர் ஆகியோரின் விதந்துரையுடன்) **"செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மத்திய மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் மற்றும் குறிப்பிட்ட மாதிரிக்கு புறம்பாகவும் பூரணமின்றியும் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. (மாதிரி விண்ணப்பப்படிவத்தினை www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்)

04. 2020.10.27 ஆம் திகதிய 2199/10 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள ஆட்சேர்ப்பு இதற்குப் பொருந்தும்.

05. இவ் ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு சார்ந்ததாகும்.

06. இதன் சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

2022 டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுக்
காரியாலயத்தில்,

கை/இ: டீ.ஏ.டி.டப்லிவ். தயானந்த,
செயலாளர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை

**மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கும் திட்டம்**

<table>
<tr><th></th><th>புள்ளிகள் வழங்கப்படும் துறைகள்</th><th>அதிக பட்ச புள்ளிகள்</th></tr>
<tr><td>01. முதுநிலை<br>60 புள்ளிகள்</td><td>1.1 இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிருவாக தரம் I இிலுள்ள முனைப்பான சேவைக்காலத்திற்காக அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2019 இன் ஏற்புகளுக்கமைய புள்ளிகள் வழங்கப்படும் (ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம்)</td><td>60</td></tr>
<tr><td>02. திறமை<br>40 புள்ளிகள்</td><td>2.1. <u>கல்வித் தகைமைகள் (ஆயுர்வேத துறை சார் தகைமைகள்)</u><br>(அதியுயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்
<table>
<tr><td>கலாநிதிப் பட்டம் (PhD)</td><td>புள்ளிகள் 09</td></tr>
<tr><td>முதுதத்துவமாணி ( M Phil)</td><td>புள்ளிகள் 08</td></tr>
<tr><td>முதுமாணிப் பட்டம்</td><td>புள்ளிகள் 07</td></tr>
<tr><td>பட்டப்பின் டிப்ளோமா</td><td>புள்ளிகள் 06</td></tr>
</table>
அதியுயர் தரத்திற்கு பதவியுயர்வு செய்கையில் கருத்திற் கொண்டிராத பட்டப்பின் டிப்ளோமா அல்லது அதனிலும் உயர்ந்த கல்வித் தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.</td><td>09</td></tr>
<tr><td></td><td>2.2. <u>துறைசார் அனுபவங்கள்</u><br>இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் உத்தியோகத்தர் என்ற வகையில் நிருவாக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பதவியில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் (ஒரு வருடத்திற்கு 01 புள்ளி வீதம் அதிக பட்ச புள்ளிகள் 05)</td><td>05</td></tr>
<tr><td></td><td>2.3. <u>நிருவன நிருவாக விடயத் துறையுடன் தொடர்புடைய பயிற்சிப் பாடநெறிகள்</u><br>நிருவாக விடயத் துறையுடன் தொடர்புடைய பயிற்சிப் பாடநெறிகள்<br>(பயிற்சிப் பாடநெறி காலம் 02 வாரங்களுக்கு அதிகமாக இருத்தல் வேண்டும். ஒரு பாடநெறிக்கு 01 புள்ளி வீதம் மொத்த புள்ளிகள் 02)</td><td>02</td></tr>
<tr><td></td><td>2.4. <u>செயலாற்றுகை மதிப்பீட்டு அறிக்கை</u><br>விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலத்தினுள் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டின் போது பெற்றுக் கொண்ட மட்டங்களைப் பயன்படுத்தி புள்ளிகள் வழங்கப்படும்.
<table>
<tr><td>மிகவும் சிறந்தது</td><td>புள்ளிகள் 03</td></tr>
<tr><td>சராசரியிலும் கூடியது</td><td>புள்ளிகள் 02</td></tr>
<tr><td>திருப்திகரமானது</td><td>புள்ளி 01</td></tr>
</table></td><td>15</td></tr>
<tr><td></td><td>2.5. <u>வேறு தகைமைகள்</u><br>I. மாகாண, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பெறப்பட்ட துறைசார் விசேட விருதுகள்<br>II. பாராட்டுக் கடிதங்கள் (பொது 230 பீ பத்திரம்)<br>III. வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் புத்தகங்கள்<br><br>மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் யாதேனும் ஒரு சந்தர்ப்பத்திற்கு 01 புள்ளி வீதம் அதிக பட்சம் 04 புள்ளிகள் வழங்கப்படும். அதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அவை நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும்)</td><td>04</td></tr>
<tr><td></td><td>2.6. <u>நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தும் திறன்கள்</u>
<table>
<tr><td>தலைமைத்துவம்</td><td>புள்ளிகள் 02</td></tr>
<tr><td>தொடர்பாடல் திறன்</td><td>புள்ளிகள் 02</td></tr>
<tr><td>ஆளுமை</td><td>புள்ளி 01</td></tr>
</table></td><td>05</td></tr>
<tr><td></td><td>மொத்தப் புள்ளிகள்</td><td>100</td></tr>
</table>